( Based on New Official Model Question Paper Pattern )

## மேல்நிலை முதலாம் ஆண்டு

## கணக்குப்பதிவியல்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. பின்வருவனவற்றில் எது கணக்கையலின் நோக்கங்களில் இடம் பெறாது?
   அ. வணிக நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தை கண்டறிதல்
   ஆ. வணிக நிறுவனத்தின் நிதிநிலை மற்றும் நிலையை அறிதல்
   இ. நடவடிக்கைகளை இனம் கண்டு குறிப்பேட்டில் பதிவு செய்தல்
   ஈ. பல்வேறு பயனீட்டாளர்களின் தேவைக்கேற்ப தகவல்களை வழங்குதல்

2. பொருத்துக :
   i) இரட்டைப்பதிவு -- 1. கோஹ்லர்
   ii) கணக்கேடுகள் பராமரிப்பு -- 2. லூகா பாசியோலி
   iii) கணக்கியல் தரநிலை -- 3. கார்டர்
   iv) குறிப்பேடு -- 4. ஜே. ஆர். பேட்லிபாய்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ. | 2 | 4 | 1 | 3 |
| ஆ. | 1 | 3 | 4 | 2 |
| இ. | 3 | 2 | 4 | 1 |
| ஈ. | 4 | 2 | 1 | 3 |

3. கணக்கியல் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை பதியும் வரிசை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து சரியான வரிசையைக் கண்டுபிடிக்கவும்.
   1) இருப்பாய்வு 2) குறிப்பேடு 3) நடவடிக்கைகள் 4) பேரேடு
   அ. 2-3-4-1 ஆ. 1-2-3-4 இ. 3-2-4-1 ஈ. 4- 3-2-1

4. கீழ்க்கண்டவைகளில் எது சரியானது?
   அ. முதல் = சொத்துகள் + பொறுப்புகள் ஆ. முதல் = சொத்துகள் - பொறுப்புகள்
   இ. பொறுப்புகள் = சொத்துகள் + முதல் ஈ. அனைத்தும் சரியானதே

5. நிறுவனம் பிறருக்குக் கொடுக்க வேண்டிய கடன்கள் ------
   அ. பொறுப்பாகும் ஆ. செலவாகும் இ. கடனாளி ஆவார் ஈ. சொத்தாகும்

6. பின்வருவனவற்றில் தறானது எது ?
   அ. குறிப்பேடு -- தோற்றப்பதிவேடு
   ஆ. விற்பனை ஏடு -- துணை ஏடு
   இ. ரொக்கஏடு -- முதன்மை ஏடு
   ஈ. பேரேடு -- தோற்றப் பதிவேடு

7. பின்வருவனவற்றில் எது சரியானது?
   மாற்றுச்சீட்டு என்பது --------
   அ. ஒரு நிபந்தனை ஆணை ஆ. எழுத்து வடிவிலான ஆவணம் அல்ல
   இ. இது ஏற்குநரால் ஏற்கப்படுகிறது. ஈ. முத்திரைத் தாளில் எழுதப்படாத ஒன்று

8. சரியாக பொருந்தாது எது?
   அ. பற்றுக் குறிப்பு -- வெளித்திருப்பத்தற்கான ஆதார ஆவணம்



   ஆ. விற்பனை ஏடு -- ரொக்க விற்பனை
   இ. வரவுக் குறிப்பு -- உள்திருப்பத்தற்கான ஆதார ஆவணம்
   ஈ. எந்திரம் வாங்கியது -- உரிய குறிப்பேடு

9. பின்வருவனவற்றில் எது குறிப்பேட்டுப் பதிவின் வகைகள் அல்ல?
   அ. மாற்றுப்பதிவு ஆ. தோற்றப் பதிவு இ. தொடக்கப் பதிவு ஈ. சரிக்கட்டுப் பதிவு

10. ஒரு நடவடிக்கை நிகழும் போது உடனடியாக பணம் செலுத்துதல் அல்லது பெறுதல் நிகழ்ந்தால் அது --------- நடவடிக்கை ஆகும்.
    அ. வங்கி நடவடிக்கை ஆ. ரொக்க நடவடிக்கை இ. இரண்டும் சரி ஈ. இரண்டும் தவறு.

11. இறுதிப் பதிவுகள் பதிவு செய்யுமிடம் ---------
    அ. உரிய குறிப்பேடு ஆ. ரொக்க ஏடு இ. கொள்முதல் ஏடு ஈ. பேரேடு

12. பின்வரும் எக்காரணங்களினால் வாடிக்கையாளர், சரக்களிப்பவருக்கு சரக்கினைத் திருப்பி அனுப்புகிறார்?
    (i) குறைபாடுள்ள சரக்குகள்
    (ii) வாடிக்கையாளருக்கு தாமதமாக சரக்கினை அனுப்புதல்
    (iii) தேவைக்கு அதிகமான சரக்குகளை அனுப்புதல்
    (iv) சரக்கு மாதிரியிலிருந்து மாறுபட்டிருத்தல்
    சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.
    அ. (iii) மட்டும் தவறு ஆ. (iv) மட்டும் தவறு இ. அனைத்தும் தவறு ஈ. அனைத்தும் சரி

13. கீழ்க்கண்டவற்றில் எது எதிர்ப்பதிவாக பதிவு செய்யப்படும்?
    அ. சொந்த செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
    ஆ. அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
    இ. வாடிக்கையாளர், நிறுவனத்தின் வங்கிக்கணக்கில் நேரடியாகச் செலுத்திய தொகை
    ஈ. வங்கி எடுத்துக் கொண்ட வட்டி

14. பின்வருனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது?
    அ. கட்டடம் கணக்கு ஆ. கொடுபடவேண்டிய சம்பள கணக்கு இ. மகேஷ் கணக்கு
    ஈ. பாலன் நிறுவனம்

15. இறுதி சரக்கிருப்பு, அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு --------
    அ. முக்கியத்துவமரபு ஆ. பண மதிப்பீட்டுக்கருத்து இ. முன்னெச்சரிக்கைமரபு
    ஈ. நிகழ்வு தீர்வு / கருத்து

16. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது ---------
    அ. குறிப்பேடு ஆ. இருப்பாய்வு இ. இருப்பு நிலைக் குறிப்பு ஈ. பேரேடு

17. கீழ்கண்ட எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?
    அ. தபால்செலவு மற்றும் பயணச் செலவுகள் ஆ. மேலாளரின் ஊதியம்
    இ. அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க ஈ. மூலப் பொருட்கள் வாங்க

18. வங்கிச்சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது ------
    அ. வங்கி அறிக்கை ஆ. ரொக்கஏடு இ. வங்கி அறிக்கை மற்றும் ரொக்கஏட்டின் வங்கி பத்தி

ஈ. சில்லறை ரொக்கஏடு

19. விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம் -------
அ. பற்றுக் குறிப்பு ஆ. வரவு குறிப்பு இ. இடாப்பு ஈ. ரொக்க இரசீது

20. இருப்பாய்வில் பற்றுப் பத்தியின் மொத்தமும் வரவுப் பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு -------------
அ. வியாபாரகணக்கு ஆ. வேறுபாட்டு கணக்கு இ. அனாமத்து கணக்கு ஈ. இதரகணக்கு

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 21- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. கணக்கேடுகள் பராமரிப்பு என்பது, கணக்கு ஏடுகளில் நிதி நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் ஒரு செயல்முறை. இதுவே, கணக்கியலின் முதன்மை செயல்முறையாகும்.
**கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.**

22. அருண் ₹. 5,00,000 ரொக்கதுடன் ஒரு தொழிலை தொடங்கும் போது, நிறுவனத்திற்கு ₹. 5,00,000 ரொக்கமாக கிடைக்கும். அதே நேரத்தில் வணிக நிறுவனம் அருணுக்கு ₹. 5,00,000 கொடுக்க வேண்டிய பொறுப்பு உருவாகிறது.
1. இக்கருத்து, இரட்டைப்பதிவு முறையில், கணக்கேடுகள் பராமரிப்பு அனைத்திற்கும் அடிப்படையாக விளங்குகிறதா?
2. இக்கருத்திலிருந்து உருவாகிய அடிப்படை கணக்கியல் சமன்பாட்டினை எழுதுக.

23. அன்பிற்கு காசோலை மூலம் செலுத்தியது ₹.5,000.
1. மேற்கண்ட நடவடிக்கையில், எதை பற்று வைக்கவேண்டும், எதை வரவு வைக்கவேண்டும்?
2. கணக்கின் தன்மை யாது?

24. 2018, ஆகஸ்ட் 1ஆம் நாள் சில்லறைக்காசாளரிடம் ₹. 2,000 கொடுக்கப்பட்டது. அவர் அந்த மாதம் செலவழித்த தொகை ₹.850. ஆகஸ்ட் 31 அன்று, ₹.850 தலைமைக்காசாளரால் கொடுக்கப்படும். அதன்மூலம் செப்டம்பர் மாதத்திய செலவுகளுக்காக,
1. செப்டம்பர் 1 அன்று அவரிடம் எவ்வளவு தொகை இருக்கும்?
2. குறிப்பிட்டகாலத்தின் ஆரம்பத்தில் சில்லறைக்காசாளரிடம் தரப்பட்ட தொகைக்கு என்னவென்று அழைக்கப்படும்?

25. கண்ணன் என்பவர், தனது தந்தை கொடுத்த சேமிப்புத் தொகை ₹. 2,000 - லிருந்து, தனது பிறந்த நாளுக்காக ₹.500 மதிப்பிற்கு கேக் வாங்கினார் மற்றும் ₹. 300 மதிப்பிற்கு வாழ்த்து அட்டைகள் தயாரிப்பதற்கான பொருட்களை வாங்கினார். தயார் செய்த வாழ்த்து அட்டைகளை ₹.250 - க்கு ரொக்கத்திற்கு விற்பனை செய்தார்.
வினாக்கள்
1. வாழ்த்து அட்டைகளை விற்பனை செய்ததை எந்த துணை ஏட்டில் பதிவு செய்யவேண்டும்?
2. கண்ணன் என்பவர் கொள்முதல் செய்த பொருட்களின் மதிப்பு யாது?

26. மாற்றுச்சீட்டின் வரைவிலக்கணம் தருக.
27. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?
28. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.
29. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?
30. 'காசோலை இன்னும் முன்னிலைப் படுத்தவில்லை' என்பதன் பொருள் என்ன?



## பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 31- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. ஒரு குறிப்பேட்டுப் பதிவு ஒன்றுக்கு மேற்பட்ட பற்று இனங்களையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வரவு இனங்களையோ அல்லது இரண்டையுமோ கொண்டிருந்தால் அது கூட்டுக் குறிபேட்டுப்பதிவு எனப்படும்.
கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப்பதிவு தருக.
ராம் என்பவர் ஆகஸ்ட், 31, 2018 அன்று சம்பளம் கொடுத்தது ₹.15,000, மின் கட்டணம் செலுத்தியது ₹. 8,000 மற்றும் கூலி கொடுத்தது ₹. 2,000.

32. இருப்பாய்வை எந்த ஒரு நாளில் வேண்டுமானாலும் தயாரிக்க முடியும். அதாவது மாத இறுதியில், காலாண்டு இறுதியில் என்றாலும், இது ஒரு கணக்காண்டின் இறுதியில் தயாரிக்கப்படுவது வழக்கமாகும். கணக்கியல் செயல்முறையில், இருப்பாய்வு தயாரிப்பது என்பது மூன்றாவது படிநிலையாகும். நடவடிக்கைகளை குறிப்பேட்டிலோ அல்லது துணைஏடுகளிலோ பதிவது முதல்படிநிலையாகும். அதனை அடிப்படையாகக் கொண்டு பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிப்பது இரண்டாவது படிநிலையாகும்.

33. வினாக்கள் : 1. இருப்பாய்வு வழக்கமாக எப்போது தயாரிக்கப்படுகின்றது?
2. எதன் அடிப்படையில், பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப் படுகின்றன?
3. இருப்பாய்விலிருந்து எடுக்கப்பட்ட பேரேட்டுக்கணக்குகளின் இருப்புகளை அடிப்படையாகக் கொண்டு, நிதிநிலைஅறிக்கைகளான வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்குகளையும் மற்றும் இருப்பு நிலைக்குறிப்பையும் தயாரிக்க முடியுமா?

34. கீழ்க்காணும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதவும்

| 2015 | | | ₹ |
|---|---|---|---|
| மார்ச் | 1 | சோமு என்பவருக்கு கடனாக சரக்கு விற்றது | 5,000 |
| | 7 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 300 |
| | 15 | வட்டி பெற்றது | 1,800 |

35. இயந்திரம் பொருத்த கூலி ₹. 8,000 . கூலி கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. 31.டிசம்பர் 2016 இல் திருத்தப் பதிவினைத் தருக.

36. கீழ்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டை தயாரிக்கவும் :
1) எழில் வியாபாரம் தொடங்கியது ₹. 75,000 2) சரக்கு கொள்முதல் செய்தது ₹. 25,000
3) ஊதியம் ரொக்கமாக வழங்கியது ₹. 27,000

37. கணக்கியல் சமன்பாட்டின்ப்பாட்டில் விடுபட்ட தொகையினைக் கண்டுபிடி.

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 22,000 | = | ? | + | 3,000 |
| (ஆ) | ? | = | 27,000 | + | 44,000 |
| (இ) | 52,000 | = | 44,000 | + | ? |

38. பின்வரும் விவரங்களைக் கொண்டு வங்கி சரிக்கட்டும் பட்டியல் தயாரிக்க.
i) திரு.ராமனுக்கு அளித்த காசோலை இதுவரை செலுத்துகைக்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை ₹.7,500
ii) வங்கியில் செலுத்தியும் வசூலாகாதது ₹.3,000
iii) வங்கி அளித்த வட்டி ₹. 100.

B.BALAJI, PG ASST IN COMMERCE, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

39. விடுபட்டத் தொகையை பூர்த்தி செய்யவும்.

## தனிப்பத்தி ரொக்க ஏடு

| நாள் | பெறுதல்கள் | இ. எ | பே. ப. எ | தொகை ₹. | நாள் | செலுத்தல்கள் | சா சீ. எ | பே. ப எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2018<br>ஆக 1<br>25 | முதல் க/ கு<br>விற்பனை க/கு | | | 12,000<br>1,500 | 2018<br>ஆக19<br>31 | கொள்முதல் க/கு<br>இருப்பு கீ / இ | | | 3,500<br>--------- |
| | | | | --------- | | | | | --------- |

40. தேவையெனக் கருதும் இடத்தில் சரியான பதிவுகளைத் தருக,

அ) <u>கொள்முதல் செய்தது</u>.
ரொக்க க / கு ப
கொள்முதல் க / கு

ஆ) <u>வங்கியில் செலுத்தியது</u>
ரொக்க க / கு ப
வங்கி க / கு

இ) <u>அருணுக்கு சரக்கு விற்றது</u>
ரொக்க க / கு ப
விற்பனை க / கு

## பகுதி --- IV

<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.</u> $7 \times 5 = 35$

41. திரு. கோவிந்தன் அவர்களின் ஏடுகளில் கீழ்காணும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| 2013 | | ₹. |
|---|---|---|
| மார்ச் 1 | திரு. கோவிந்தன் தொழில் தொடங்கியது | 20,000 |
| 3 | காசோலை கொடுத்து சரக்கு வாங்கியது | 5,000 |
| 7 | வங்கியிலிருந்து கடன் பெற்றது | 8,000 |
| 11 | கபிலுக்கு கடனாக விற்பனை செய்தது | 13,000 |
| 18 | அலுவலக செலவுகளுக்கு வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 7,200 |
| 22 | மணியிடமிருந்து அறைகலன் வாங்கியதற்கு இணைய வங்கி மூலம் செலுத்தியது | 25,000 |
| 30 | காசோலை மூலம் சம்பளம் வழங்கியது | 12,000 |

( அல்லது )

கீழ்க்காணும் தகவல்களிலிருந்து திரு.கன்னியப்பன் அவர்களின் வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தருக.

| | | |
|---|---|---|
| i) | ரொக்க ஏட்டின்படி இருப்பு | ₹. 8,000 |
| ii) | வங்கியில் செலுத்தியும் வசூலாகாதது | ₹. 4,600 |
| iii) | அளித்த காசோலைகள் செலுத்துகைக்கு முன்னிலைப் படுத்தப்படவில்லை | ₹. 5,000 |
| iv) | வங்கி கட்டணம் | ₹. 600 |
| v) | திரு. கோபு அவர்கள் வங்கியில் நேரடியாக செலுத்தியது | ₹. 7,000 |



42. பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு ரொக்கம், வங்கி மற்றும் தள்ளுபடி பத்திகள் கொண்ட ரொக்க ஏடு தயார் செய்க.

| 2008 ஜனவரி | | ₹. |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 50,000 |
| | வங்கி இருப்பு | 30,000 |
| 3 | வங்கியில் செலுத்தியது | 48,000 |
| 10 | ராமனிடம் பெற்ற காசோலை | 32,000 |
| | தள்ளுபடி அனுமதித்தது | 200 |
| 13 | அகிலாவுக்கு வழங்கிய காசோலை | 10,200 |
| | தள்ளுபடி பெற்றது | 150 |
| 28 | சொந்த தேவைக்கு வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 500 |
| 29 | அலுவலகச் செலவிற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 5,000 |
| 30 | பணியாளர்களுக்கு ஊதியம் இணைய வங்கி மூலம் செலுத்தப்பட்டது | 8,500 |

( அல்லது )

பின்வரும் வணிக நடவடிக்கைகளின் விளைவுகளை கணக்கியல் சமன்பாட்டில் காண்பிக்கவும்.

(i) அன்பு, ரொக்கம் ₹. 20,000 ; சரக்குகள் ₹. 12,000 மற்றும் இயந்திரம் ₹. 8,000 ஆகியவற்றுடன் தொழில் தொடங்கினார்

(ii) ரமணியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹. 7,000

(iii) ரமணிக்கு ₹. 6,900 கொடுத்து கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது

(iv) ₹. 5,400 மதிப்புள்ள சரக்குகள் கடனுக்கு இராஜனுக்கு விற்கப்பட்டது ₹. 6,000

(v) இராஜனிடமிருந்து ₹. 5,800 பெற்றுக்கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது

43. பின்வரும் இருப்பாய்வினை சரிசெய்யவும்.

| விவரம் | பற்று ( ₹ ) | வரவு ( ₹ ) |
|---|---|---|
| முதல் | 1,50,000 | |
| விற்பனை | | 75,000 |
| கொள்முதல் | 45,000 | |
| சம்பளம் | 3,500 | |
| பெற்ற வாடகை | 500 | |
| வங்கிமேல் வரைப்பற்று | | 3,100 |
| கடனீந்தோர் | | 5,500 |
| வளாகம் | 1,46,000 | |
| தொடக்கச் சரக்கிருப்பு | | 10,000 |
| விற்பனைத் திருப்பம் | 1,000 | |
| அளித்த தள்ளுபடி | | 800 |
| பெற்ற தள்ளுபடி | | 1,000 |
| கூலி | 2,900 | |
| செலுத்திய கழிவு | | 1,100 |
| கடனாளிகள் | 22,800 | |
| பொதுச் செலவுகள் | 2,000 | |
| மொத்தம் | 2,35,100 | 2,35,100 |

( அல்லது )

கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு திரு. சந்திரனின் தனிப்பத்தி ரொக்க ஏடு தயார் செய்க.

| 2012 டிசம்பர் | | ₹. |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 80,000 |
| 7 | ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது | 25,000 |
| 9 | குருவிடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | 6,000 |
| 12 | சோமுவுக்கு சரக்கு கடனுக்கு விற்றது | 8,000 |
| 14 | குருவிற்கு செலுத்தியது | 6,000 |
| 17 | சோமுவிடமிருந்து ரொக்கம் பெற்றது | 8,000 |
| 20 | வியாபார செலவுகள் செய்தது | 10,000 |
| 21 | கிருஷ்ணாவிடமிருந்து காசோலை பெற்றது | 10,000 |
| 27 | கழிவு பெற்றது | 5,000 |

44. திரு. முத்து அவர்களின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளைக் கொண்டு 31. 12. 2016 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்க.

1) சம்பளம் ₹. 5,000  2) முதல் ₹. 34,000  3) கடனீந்தோர் ₹. 1,000
4) கொள்முதல் ₹ 10,000  5) கடனாளி ₹. 9,,000  6) விற்பனை ₹. 16,000
7) உள் ஏற்றிச்செல் செலவு ₹. 1,000  8) இயந்திரம் ₹. 20,000  9) எடுப்புகள் ₹.4,000
10) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ₹. 2,000

( அல்லது )

பின்வரும் நடவடிக்கைகளிலிந்து குறிப்பேட்டுப் பதிவுகளையும் மற்றும் பேரேட்டுக் கணக்குகளையும் தயாரிக்கவும்.

| 2015 | | ₹. |
|---|---|---|
| பிப் 1 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 5,000 |
| 2 | குமார் என்பவரிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 4,000 |
| 5 | பிரபு என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 8,000 |
| 12 | பிரபுவிடமிருந்து ரொக்கம் பெற்றது | 1,200 |
| 20 | குமாருக்கு ரொக்கம் செலுத்தியது | 2,000 |
| 25 | சம்பளம் ரொக்கமாக கொடுத்தது | 3,000 |

45. பின்வரும் விவரங்களைக் கொண்டு கோவிந்தன் அறைகலன் நிறுவனத்தின் 2018 ஜூலை மாதத்திற்கான விற்பனை ஏட்டினை தயார் செய்க.

2018 ஜீலை 5. இராஜ் & கோவிற்கு கடனுக்கு விற்றது
10 மேஜைகள் மேஜை ஒன்று ₹. 1,800 வீதம்
10 நாற்காலிகள் நாற்காலி ஒன்று ₹. 1,000 வீதம்
ஜூலை 11 ரூபி நிறுவனத்திற்கு ரொக்கத்திற்கு விற்றது
8 மேஜைகள் மேஜை ஒன்று ₹. 2,500 வீதம்
8 நாற்காலிகள், நாற்காலி ஒன்று ரூ.150 வீதம்
ஜூலை 15. அலங்கார் நிறுவனத்திற்கு கடனுக்கு விற்றது
5 அலமாரிகள், அலமாரி ஒன்று ₹. 5,000 வீதம்
3 மேஜைகள், மேஜை ஒன்று ₹.3,500 வீதம்
ஜூலை 21. இயந்திரம் கடனுக்கு விற்றது ₹. 3,000
ஜூலை 25. கோபிநாத்திற்கு கடனுக்கு விற்றது :
7 மேஜைகள், மேஜை ஒன்று ₹. 4,500 வீதம்



46. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

**பிரதீப் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 ஆகஸ் 1 | ----------- ப<br>----------<br>( தொழில் தொடங்கியது ) | | 25,000 | ---------- |
| 13 | அலுவலக செலவுகள் க / கு ப<br>கொள்முதல் க / கு<br>( -------------------------------) | | 1,000 | ---------- |
| 21 | ------------- ப<br>----------<br>( வங்கியிலிருந்து எடுத்தது) | | ---------- | 12,600 |
| 25 | பாபு க / கு ப<br>விற்பனை க / கு<br>( ------------------- ) | | 12,000 | 12,000 |
| 26 | காப்பீட்டு முனைமம் க / கு ப<br>வங்கி க / கு<br>( ------------------- ) | | 1,5000 | --------- |
| 30 | ------------- ப<br>----------<br>( விற்பனைக்கு பணவைப்பு இயந்திரம் மூலம் பெற்றது ) | | ---------- | 12,600 |

( அல்லது )

கீழேகொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து ரஹீம் நிறுவனத்தின் 2018 மார்ச் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயார்செய்க.

1 ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று ₹.2,500
2 ரொக்க ஏட்டின் பற்று பக்கம் ₹.700 குறைவாக கூட்டப்பட்டுள்ளது.
3 நிகழ்நேர மொத்த தீர்வகம் (RTGS) வழியாக வங்கியில் பெறப்பட்ட தொகை ₹.2,00,000 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை
4 2018 மார்ச் 29 அன்று விடுத்த இரு காசோலைகள் ₹. 1,800 மற்றும் 2,000-இல் இரண்டாவது காசோலை மட்டுமே செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது.
5 நிலை அறிவுறுத்தலின் படி வங்கி செலுத்திய சிற்றுந்து மீதான காப்பீட்டு முனைமம் ₹.1,000 ரொக்கஏட்டில் பதியப்படவில்லை.

47. திரு.அருள் அவர்களின் இருபத்தி ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை பதிவு செய்க.

| 2006 ஜூலை | | ₹. |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 48,000 |
| 2 | ரொக்க விற்பனை | 7,000 |
| 7 | ரொக்க கொள்முதல் | 18,000 |
| 8 | கமலிடமிருந்து பெற்றரொக்கம் | 3,450 |
| | அனுமதித்த தள்ளுபடி | 50 |
| 10 | வங்கியில் செலுத்தியது | 21,000 |
| 15 | விளம்பரச் செலவுகளுக்கு ரொக்கம் செலுத்தியது | 1,000 |

B.BALAJI, PG ASST IN COMMERCE, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

| | | |
|---|---|---|
| 18 | அலுவலக செலவிற்காக காசோலை மூலம் ரொக்கம் எடுத்தது | 10,000 |
| 19 | அருணுக்கு செலுத்திய ரொக்கம் ₹. 1,850 அவர் அனுமதித்த தள்ளுபடி | 150 |

( அல்லது )

கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன்பணமீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 ஜுலை | | ₹. |
|---|---|---|
| 1 | காசாளரிடமிருந்து முன்பணம் பெற்றது | 2,000 |
| 7 | மடல் ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது | 100 |
| 8 | வெள்ளைத் தாள்கள் வாங்கியது | 50 |
| 10 | ஆட்டோ ரிக்ஷா கட்டணம் கொடுத்தது | 200 |
| 15 | கூலி கொடுத்தது | 300 |
| 18 | தபால் செலவுகள் செய்தது | 100 |
| 21 | எழுது பொருள்கள் வாங்கியது | 450 |
| 23 | தேநீர் செலவுகள் செய்தது | 60 |
| 25 | துரித அஞ்சல் செலவு செய்தது | 150 |
| 27 | சிற்றுண்டி செலவுகள் செய்தது | 250 |
| 31 | ஏற்றிச் செல்செலவுகள் செய்தது | 150 |